/மின்னஞ்சலில்/

**தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள்**
**ந. க. எண். 1929 / அ4 / இ4 / 2024, நாள். 23.01.2024.**

*****

**பொருள் :** தமிழ்நாடு அமைச்சுப்பணி – பயிற்சி – பவானிசாகர், அரசு அலுவலர் பயிற்சி நிலையம் மூலம் இளநிலை உதவியாளர் / உதவியாளர்களுக்கு அடிப்படைப் பயிற்சி நடத்துதல் – 31.12.2023 நிலவரப்படி பயிற்சி பெறவேண்டி நிலுவையில் உள்ள பணியாளர்கள் மற்றும் பணிவரன்முறை செய்யப்படாத பணியாளர்களின் பட்டியல் – சேர்க்கை மற்றும் நீக்கம் – தொடர்பாக.

**பார்வை :** தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க. எண். 49371/அ4/இ4/2023, நாள். 10.08.2023.

******

பள்ளிக் கல்வித் துறையில் பணிபுரியும் இளநிலை உதவியாளர் / உதவியாளர்களில் (நேரடி நியமனம் மூலம் உதவியாளராக நியமனம் பெற்றவர்கள் உட்பட) பவானிசாகர் அடிப்படைப் பயிற்சி பெறவேண்டி நிலுவையில் உள்ள பணியாளர்களின் விவரங்கள் (படிவம் 1) மற்றும் இளநிலை உதவியாளர்களுக்கு நியமன அலுவலர் முதன்மைக் கல்வி அலுவலர் என்ற நிலையில் பணிநியமனம் பெற்று இதுநாள் வரை பணிவரன்முறை செய்யப்படாத பணியாளர்கள் மற்றும் நேரடி நியமன உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்யப்படாமல் நிலுவையில் உள்ள பணியாளர்கள் விவரம் (படிவம் – 2) பார்வையில் காணும் செயல்முறைக் கடிதத்தில் கோரப்பட்டது. அதன்படி பெறப்பட்ட விவரங்களின் அடிப்படையில் பணியாளர்களின் பெயர்கள் தொகுக்கப்பட்டு பயிற்சிக்கு முன்னுரிமைப்படி அனுப்பப்பட்டு வருகின்றனர். தற்போது தொகுப்புப்பணி சரிபார்க்கப்பட உள்ளதால், பார்வையில் காணுமாறு தொகுக்கப்பட்ட பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இப்பட்டியலில் உள்ள நபர்களின் விவரங்கள் அனைத்தையும் கீழ்க்கண்டவாறு சரிபார்க்கப்பட வேண்டும்.

1. 53 வயது கடந்துள்ளவர்கள் இருப்பின் அவர்களின் பெயரினை நீக்கம் செய்து, வயதுத் தளர்வாணை பெற வேண்டிக் கருத்துருக்கள் இயக்குநரகத்துக்கு உடன் அனுப்பப்பட வேண்டும்.

2. இப்பட்டியலில் உள்ள இளநிலை உதவியாளர்களின் பெயர் முகவரி, ஆண் / பெண், நியமன முறை, பிறந்த தேதி மற்றும் பணிவரன்முறை நாள் சரியாக உள்ளதா என சரிபார்க்கப்பட வேண்டும்.

3. இப்பட்டியலில் நேரடி நியமனம் மற்றும் தட்டச்சர் பதவியிலிருந்து பதவி உயர்வு பெற்ற உதவியாளர்களின் பெயர், முகவரி, ஆண் / பெண், நியமன முறை, பிறந்த தேதி, தட்டச்சர் பதவியில் பணிவரன்முறை நாள் மற்றும் உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் ஆகியவை சரிபார்க்கப்பட வேண்டும்.

4. இப்பட்டியலில் உள்ள இளநிலை உதவியாளர்கள் / உதவியாளர்கள் தவிர சேர்க்கப்பட வேண்டிய நபர்களின் விவரங்களை தனிப்பட்டியலாகவும் (உரிய படிவத்தில்) நீக்கம் செய்யப்பட வேண்டிய நபர்களின் விவரங்களைத் தனியாகவும் அனுப்பிட வேண்டும்.

(த.பி.பா.)

5. நீக்கம் செய்யப்பட வேண்டிய நபர்களின் பட்டியல் அனுப்பும்போது இப்பட்டியலின் வரிசை எண் குறிப்பிட்டு என்ன காரணத்திற்காக நீக்க வேண்டும் என்பதையும் குறிப்பிடப்பட வேண்டும்.

6. சேர்க்கை மற்றும் நீக்கல் சார்ந்த விவரங்கள் தொகுக்கப்பட்டு, முதன்மைக் கல்வி அலுவலர் நிலையில் மட்டுமே அனுப்புதல் வேண்டும்.

7. பள்ளித் தலைமையாசிரியர்கள் / தனிநபர்கள் / மாவட்டக் கல்வி அலுவலர்கள் / இதர அலுவலர்கள் மூலம் தகவல்கள் அனுப்புதல் கூடாது (இருமுறை இடம் பெறும் நிலை ஏற்படுகிறது என்பதால்) அவ்வாறு வரப்பெறின் அக்கோரிக்கையினை ஏற்க இயலாத நிலை ஏற்படும்.

8. **இப்பட்டியல் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சி பெற நிலுவையில் உள்ளவர்களின் முன்னுரிமைப் பட்டியல் எனக் கருத வேண்டாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.**

எனவே இவ்விவரத்தினை தங்களது மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகள் மற்றும் இதர அலுவலர்களுக்கும் தெரிவித்து அடிப்படைப் பயிற்சி பெற வேண்டி நிலுவையில் உள்ள பணியாளர்கள் பட்டியலில் சேர்த்தல் மற்றும் நீக்கல் விவரங்களை (மிகமிகக் கவனமுடன் தனிக்கவனம் செலுத்தி) **30.01.2024க்குள்** முதன்மைக் கல்வி அலுவலர் அளவில் தொகுத்து இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் பெயரிட்ட முகவரிக்குக் கடிதம் வாயிலாகவும் / (அ4 பிரிவு மின்னஞ்சல் (dsea4section@gmail.com என்ற) முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது. மேலும், பிரதி மாதம் பணிவரன்முறை செய்யப்படும் இளநிலை உதவியாளர் / உதவியாளர்களின் விவரங்களைப் பட்டியலிட்டு அவ்வப்போது அனுப்பிடுமாறும் அறிவுறுத்தப்படுகிறது.

**இணைப்பு :** பணியாளர்களின் பெயர்ப் பட்டியல்
(படிவம் 1 மற்றும் 2)

**இணை இயக்குநர்**
**(பணியாளர் தொகுதி).**

**பெறுநர்** – அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

**நகல் :–** திட்ட இயக்குநர், மாநிலத் திட்ட இயக்ககம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை – 6.
**நகல் :–** இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்ககம், சென்னை–6.
**நகல் :–** இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை–6.
**நகல் :–** இயக்குநர், தனியார் பள்ளிகள் இயக்ககம், சென்னை–6.
**நகல் :–** செயலாளர், ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை–6.
**நகல் :–** இயக்குநர், பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம், சென்னை–6.

} தங்கள் அலுவலகம் சார்ந்த விவரங்களை அனுப்பி வைக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**நகல் :–** இவ்வலுவலக "அ2" பிரிவு (இவ்வலுவலகம் மற்றும் SSA சார்ந்த விவரங்கள் அளிக்கும் பொருட்டு).